ந.க.எண் 14492/2009.

வட்டாட்சியர் அலுவலகம்,
குன்னூர்
நாள்: .01.2016.

## நிலம் ஒப்படை சான்று

நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 24000/2015, நாள்: 13.10.2015-ன்படி நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், கேத்தி II கிராமம், புல எண். 977/1 காலையில் "தரிசு" என்ற வகைபாடு உடைய 5.62.50 ஹெக்டேர் விஸ்தீரணம் கொண்ட நிலத்தில் 1.62.30 ஹெக்டேர் விஸ்தீரணம் உடைய நிலத்தினை ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் பொருட்டு செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், கோவை அவர்களுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

i. மாநில நிலை ஆணை 22-ன் கீழ் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் மற்றும் அரசு அவ்வப்போது விதிக்கும் நிபந்தனைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும் உட்பட வேண்டும்.

ii. நிலத்தில் என்ன காரணத்திற்காக முன்நுழைவு அனுமதி வழங்கப்படுகிறதோ அதற்கு மட்டும் மேற்படி நிலம் உபயோகிக்கப்பட வேண்டும்.

iii. கட்டிடம் கட்டுவதற்கு முன் புவியியல் தொழில் நுட்பத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, சுகாதாரத் துறை மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் தீர்மானம் ஆகியவற்றில் ஏதேனும் சிறப்பு நிபந்தனைகள் இருப்பின் அதற்கு உட்பட வேண்டும்.

iv. முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் கட்டடம் கட்டப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் நிலம் வருவாய்த் துறைக்கு மீள எடுக்கப்படும்.

எனவே, மேற்கண்ட நிபந்தனைகளின் பேரில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், கோவை செயற்பொறியாளருக்கு கேத்தி II கிராமம், புல எண். 977/1 காலையில் "தரிசு" என்ற வகைபாடு கொண்ட 1.62.30 ஹெக்டேர் விஸ்தீரணம் கொண்ட நிலம் ஒப்படைக்கப்படுகிறது.

நிலம் ஒப்படைதாரர்

வட்டாட்சியர்,
குன்னூர்,
நீலகிரி மாவட்டம்.

TRUE COPY

EXECUTIVE ENGINEER
T.N.S.C.B. COBE DV

பெற்றுக் கொள்பவர்

செயற்பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
கோவை மாவட்டம்.

17

நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள், உதகமண்டலம்
முன்னிலை– டாக்டர் பொ. சங்கர், இ.ஆ.ப.,

ந.ஆ4/24000/2015

நாள் 13.10.2015

பொருள்– நில உரிமை மாற்றம் – குன்னூர் வட்டம் – கேத்தி 2 கிராமம் – புல எண் 977/1 காலையில் 1.62.30 ஹெக்டேர் நிலம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு வீடுகள் கட்ட – முன் நுழைவு அனுமதி ஆணை – வெளியிடப்பட்டது.

படிக்கப்– 1. கூடுதல் தலைமை செயலர் மற்றும் நில நிர்வாக
பட்டவை ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண் பி3/6953/2011 நாள் 8.7.2014

2. குன்னூர் வருவாய் கோட்டாட்சியரின் கடிதம் ந.க. ஆ4/4378/2014 நாள் 18.11.2014

------

ஆணை

2) குன்னூர் வட்டம், கேத்தி 2 கிராமம், புதிய புல எண் 977/1 காலையில் 1.62.30 ஹெக்கர் நிலத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க, மேற்படி காலையை பராதீனமாக வழங்குவது தொடர்பாக பார்வையில் காணும் குன்னூர் வருவாய் கோட்டாட்சியரின் அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டது.

3) குன்னூர் வட்டம், கேத்தி 2 கிராமம், புல எண் 977/1 காலையானது 5.62.50 ஹெக்டேர் விஸ்தீரணம் கொண்டு கிராம ஆவணங்களில் "தரிசு" என்ற பதிவினைக் கொண்ட அரசு புறம்போக்கு நிலமாகும். இக்காலையானது கேத்தி இரயில் நிலையத்திலிருந்து எல்லநள்ளி செல்லும் சாலையில் வெட்டுமலை சந்து என்னும் இடத்திலிருந்து சாலையின் வலதுபுறமாக அமைந்துள்ளது. இந்த காலையில் ஏழை பொதுமக்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்க 1.62.30 ஹெறக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

4) குன்னூர் வட்டம், கேத்தி 2 கிராமம், புல எண் 977/1 காலையில் 1.62.30 ஹெறக்டேர் நிலத்தினை, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க, பராதீனமாக வழங்குவது தொடர்பாக கேத்தி 2 கிராமத்தில் நன்கு விளம்பரம் செய்யப்பட்டதில் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனை ஏதும் பெறப்படவில்லை. மேலும் கேத்தி 2 கிராம பொதுமக்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் பராதீனமாக வழங்குவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என வாக்குமூலம் அளித்துள்ளார்கள். பராதீனமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள காலையில் அரசுக்கு பாதுகாக்கப்படவேண்டிய புராதான நினைவுச் சின்னங்களோ, விலையுயர்ந்த மரங்களோ, கனிம வளங்களோ ஏதுமில்லை. மேலும் காலையின் குறுக்கே உயர்மின் அழுத்த கம்பிகள் ஏதும் செல்வதில்லை.

5) நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், கேத்தி 2 கிராமம், புல எண் 977/1 காலையில் 1.62.30 ஹெறக்டேர் நிலத்தினை ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் பொருட்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் முன்நுழைவு அனுமதி வழங்கப்படுகிறது.

i) வருவாய் நிலை ஆணை 23எ—ன் கீழ் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் மற்றும் அரசு அவ்வப்போது விதிக்கும் நிபந்தனைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும் உட்பட வேண்டும்.

ii) நிலத்தில் என்ன காரணத்திற்காக முன்நுழைவு அனுமதி வழங்கப்படுகிறதோ அதற்கு மட்டும் மேற்படி நிலம் உபயோகிக்கப்பட வேண்டும்.

iii) கட்டிடம் கட்டுவதற்கு முன் புவியியல் தொழில் நுட்பத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, சுகாதாரத்துறை மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் தீர்மானம் ஆகியவற்றில் ஏதேனும் சிறப்பு நிபந்தனைகள் இருப்பின் அதற்கு உட்பட வேண்டும்.

iv) முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் கட்டடம் கட்டப்படவேண்டும். தவறும் பட்சத்தில் நிலம் வருவாய்த்துறைக்கு மீள எடுக்கப்படும்.

v ) முன்நுழைவு அனுமதி வழங்கப்படும் புலத்தில் உள்ள மரங்களின் மதிப்பு மாவட்ட வன அலுவலரிடம் பெறப்பட்டு அதன் தொகையை உரிய தலைப்பில் செலுத்தப்படவேண்டும்.

6) குன்னூர் வட்டாட்சியர், குன்னூர் வட்டம் , கேத்தி 2 கிராமம் , புல எண் 977/1 காலையில "தரிசு" வகைபாடு உடைய 5.62.50 ஹெறக்டேர் நிலத்தில் 1.62.30 ஹெறக்டேர் நிலம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு வீடுகள் கட்ட செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், கோவை அவர்களுக்கு ஒப்படைத்து, அதற்கான ஒப்படைப்பு சான்றினை பெற்று அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் ஒப்படை செய்தமைக்கான ஆவணங்களுடன் முறையான நில உரிமை மாற்ற முன்மொழிவுகளை குன்னூர் கோட்டாட்சியர் மூலம் அனுப்பிவைக்குமாறு குன்னூர் வட்டாட்சியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

ஒம்/— (பொ. சங்கர்)
மாவட்ட ஆட்சித்தலைவர்,
உதகமண்டலம்.

பெறுநர்
செயற்பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்
கோவை.
நகல்— கோட்டாட்சியர், குன்னூர்
நகல்— வட்டாட்சியர், குன்னூர்.
நகல்— யு3 இருப்பு கோப்புக்கு

// உ.ந.உ.ப.//

TRUE COPY

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
உதகமண்டலம்.

TRUE COPY

EXECUTIVE ENGINEER
T.N.S.C.B. CBE DN

EXECUTIVE ENGINEER
T.N.S.C.B. CBE DN

கேத்தி (தேர்வு நிலை) பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

23

முன்னிலை :- திரு. **பி. நடராஜ்**

கட்டிட உரிமம் எண்:- **06 /2020-21** நாள் :- **07 10 2020**

பொருள்:- கட்டிடம் – கேத்தி பேரூராட்சி – ச.எண். **977/1** (பழையது) **977/1** (புதியது) அல்லஞ்சி கிராமத்தில் தரை மற்றும் முதல் தளங்கள் கொண்ட தொகுப்பு வீடுகள் (180) கட்டிடம் கட்ட அனுமதி அளித்து உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது.

1946
14 OCT 2020

பார்வை :- 1 திரு/திருமதி. நிர்வாக பொறியாளர், த.கு.மா.வாரியம்,
த/க.பெயர் –
க..எண். அல்லஞ்சி
அவர்களின் விண்ணப்பம் நாள் :- **11 04 2018**
2 2) மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நீலகிரி மாவட்டம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண். 53 /2020 நாள் – 24–09–2020

---

AE(P)/AE&E 13
14/10/2020

## உத்திரவு:-

பார்வை (1) ல் கண்ட மனுதாரர் திரு/திருமதி. நிர்வாக பொறியாளர், த.கு.மா.வாரியம், த/க. பெயர் – க..எண். அல்லஞ்சி அவர்கள் ச.எண். **977/1** (பழையது) **977/1** (புதியது) அல்லஞ்சி கிராமத்தில் தரை மற்றும் முதல் தளங்கள் கொண்ட தொகுப்பு வீடுகள் (180) கட்டிடம் கட்ட அனுமதி கோரி விண்ணப்பித்த மனு பரிசீலிக்கப்பட்டது.

பார்வை (2) –ல் கண்ட செயல்முறைகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் மலையிட கட்டிட விதிகளுக்கு உட்பட்டும் நீலகிரி மாவட்டம் கேத்தி பேரூராட்சிக்குட்பட்ட அல்லஞ்சி கிராமத்தில் உள்ள ச.எண். **977/1** (பழையது) **977/1** (புதியது) ல் உள்ள க.எண். அல்லஞ்சி கிராமத்தில் தரை மற்றும் முதல் தளங்கள் கொண்ட தொகுப்பு வீடுகள் (180) கட்டிடம் மட்டுமே கட்ட கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கி உரிமம் அளிக்கப்படுகிறது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| GF | 3252.15 | FF | 3252.15 | BF | | Total | 6504.30 | M2 |

மனுதாரர் கட்டிடம் கட்டும் வேலைகள் மேற்கொள்ளும் பொழுது தமிழ் நாடு நகராட்சிகள் சட்டம் – **1920** மலையிடக் கட்டிட விதிகள் மற்றும் நீலகிரி மாவட்ட கட்டிடக் கலை மற்றும் அழகுணர்வுக் காப்புக் கூறுகள் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நிபந்தனைகளுக்குட்பட்டு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. மேற்கண்ட விதிமுறைகளுக்குப் புறம்பான பணிகள் அல்லது ஏதேனும் வில்லங்கங்களோ காண நேரிட்டால் அனுமதிக் கப்பட்ட உரிமம் இரத்து செய்யப்படுவதோடு சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**இவ்வுரிமம் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு ஆண்டுக்கு செல்லத்தக்கது**

– த.பி. பா –

## நிபந்தனைகள்

1. மழை நீர் சேகரிப்பு தொட்டி கண்டிப்பாக கட்டி முடிக்கப்பட்டு அறு வண்ண புகைப்படங்களுடன் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க
2. இப்பேரூராட்சியால் வழங்கப்படும் குடிநீரை கண்டிப்பாக கட்டிட பணிகளுக்கு பயன்படுத்தல் கூடாது.
3. கட்டிடத்தின் முன்புறம் மற்றும் பின்புறம் முறையே பொது நடைபாதை மற்றும் பொது ஜலதாரைக்கு குறைந்தது 4 அடி இடம் விடப்பட வேண்டும்.
4. கட்டிட பணிகளின் குப்பைகளை பேரூராட்சி பொது இடங்களில் கொட்டக்கூடாது.
5. கட்டிட வேலை முடிந்து 15 தினத்திற்குள் இவ்வலுவலகத்திற்கு எழுத்து மூலமாக அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும்.
6. கட்டிட வேலை நடைபெறும் பொழுது கட்டிடம் கட்ட அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் எப்பொழுதும் அதிகாரிகளின் பார்வைக்கு வைத்திருக்கப்பட வேண்டும்.
7. கட்டிடத்தின் படிகட்டுகள், சன்ஷேட் முதலியவைகள் பேரூராட்சி நிலத்திலோ, ரோட்டிலோ அமைந்திருக்க/கட்டக் கூடாது.
8. இந்த அனுமதி ............ மாத காலத்திற்கு அதாவது .................. வரை அமுலிலிருக்கும்.
9. தெருவை அனுசரித்துப் போட்டிருக்கும் 3 மீட்டர் காலியிடத்தில் படிகள் தவிர வேறு எந்த விதமான கட்டிடமும் கட்டக் கூடாது.
10. கட்டிடத்திற்கு அனுமதி பெற்ற இடத்தில் மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு மண் எடுக்கக்கூடாது.
11. கொடுக்கப்பட்ட தவணைக்குள் கட்டிடம் கட்டி முடிக்க வில்லையானால் அதற்கு முன்னதாக மனுக்கொடுத்து ஏற்பட்ட கட்டணத் தொகை ரூ.______________ செலுத்தி அனுமதிக் காலம் வரை ..............................நீடித்துக்கொள்ள வேண்டும். தவறினால் முழுக் கட்டணத் தொகையாகிய ரூ.______________ ஐ செலுத்தி புதியதாக அனுமதி கோரி விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும்.
12. சென்னை பொது சுகாதாரச் சட்டம் 26 மற்றும் 33 செக்ஷன்படி சர்டிபிகேட் பெறாமல் கட்டிடத்தில் குடியேறவோ அல்லது குடிவைக்கவோ கூடாது.
13. 1920–ம் வருட சென்னை மாவட்ட நகராட்சிகளின் கட்டிட பிரிவு 89–ன் படி கட்டிடம் கட்டி முடித்த அல்லது குடியேறின 15 நாட்களுக்குள் அது விவரம் நிர்வாக அதிகாரி அவர்களுக்கு தெரியப்படுத்துவதுடன், கட்டிடத்தில் முடிவான பிளான் ஒரு செட்டும் அனுப்பி வைக்க வேண்டும். கட்டிடத்திற்கு செலவான மொத்த தொகையையும் தெரிவிக்க வேண்டும்.
14. எல்லைச் சுவர் தெரு மட்டத்திலிருந்து 1.53மீட்டருக்கு மேல் கட்டக்கூடாது தெருபக்கம் உள்ள கதவுகள் உட்புறம் திறக்கும்படியாக அமைக்கப்பட வேண்டும்.
15. சமையல் அறை, குளிக்கும் அறை முதலியவைகளுக்கு வசதியாகவும் புகை கூண்டுகள் அமைத்து கட்ட வேண்டும், காற்று வசதிக்கு வேண்டிய சன்னல் கதவுகள் அமைக்க வேண்டும்.
16. மின்சாரக் கம்பிகளுக்கும் கட்டிடத்திற்கும் 1.75 மீட்டருக்கு மேலாகவும் செங்குத்துக்கு 4.5 மீட்டருக்கு மேலாகவும் இருக்க வேண்டும்
17. கட்டிடம் கட்டும் பொழுது கட்டிட நிலத்தின் வழியாக தண்ணீர் குழாய்களோ, சாக்கடைக் குழாய்களோ செல்வதைக் காணும் பட்சத்தில் தற்சமயம் வழங்கப்பட்டுள்ள உரிமை ஆணை சட்டத்தில் முற்றிலும் செல்லாததாகும்.
18. கட்டிட வேலை அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் படி இருக்க வேண்டும். ஏதாவது மாற்றம் இருக்குமானால் அதற்கேற்ப வரைபடங்களுடன் திருத்தியமைத்து மீண்டும் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.
19. கட்டிடத்திற்கு ஒரு பகுதியில் கண்டிப்பாக குறைந்தது ஒரு கழிப்பிடமாவது கட்டப்பட வேண்டும்.
20. கட்டிடம் கட்டும் இடத்தில் ஜலதாரை, இடம், ரோடு, முதலிய பிரச்சனைகளை பொருத்து ஏற்படும் தால் தகராறுகளுக்கு பேரூராட்சி மன்றம் எவ்விதத்திலும் பொறுப்பு ஏற்காது. மேலும் இது சம்பந்தமாக தகராறுகளை விண்ணப்பதாரரே தன் சொந்த செலவில் தீர்த்துக் கொள்ள வேண்டும்.
21. கட்டிடம் கட்டத் தேவையான கல், செங்கல், போன்ற கட்டிட சாமான்கள் முதலியவைகளை ரோட்டில் போட்டு வைத்துக்கொண்டு போக்குவரத்திற்கு இடையூறு செய்யக்கூடாது. அவ்வாறு மனுதாரரால் இடையூறு ஏற்பட்டால் கட்டிட அனுமதி மறுக்கப்படுவதுடன் அதனால் அப்புறப்படுத்த ஏற்படும் அனைத்து செலவையும் விண்ணப்பதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.
22. கட்டிடம் பொது சுகாதார முறைகளுக்கு ஏற்ற வகையில் கட்டப்பட வேண்டும்.
23. அரசினால் அவ்வப்போது உத்திரவிடும் சகல விதமான உத்தரவுகளுக்கும் மனுதாரர் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.
24. இந்த கட்டிட அனுமதி தவறான/போலியான ஆவணங்களின் அடிப்படையில் பெறப்பட்டதாகவோ அல்லது தவறுதலுக்கு இடம் கொடுக்க வேண்டியதாகவோ இருக்கும் என நிர்வாக அதிகாரி கருதும் பட்சத்தில் அல்லது அவருக்கு தோன்றும் உசிதமான காரணங்களைக் கொண்டும் இந்த கட்டிட அனுமதி ரத்து செய்வதற்கோ அல்லது மாற்றம் செய்வதற்கோ செயல் அலுவலரின் அதிகாரத்திற்குட்பட்டதாகும். எனவும் உரிமம் பெற்ற பிறகு எவ்வித வில்லங்கத்திற்கு உட்பட்டாலும் இரத்து செய்ய செயல் அலுவலரின் அதிகாரத்திற்குட்பட்டதாகும்.
25. மேற்கூறிய விதிமுறைகளை மீறினால் அதனால் ஏற்படும் சகலவிதமான நடவடிக்கைகளுக்கும் விண்ணபதாரரே முழுப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும். பேரூராட்சி மன்றம் எந்த விதத்திலும் பொறுப்பாகாது .
26. கட்டிடப் பகுதியிலிருந்து வரும் கழிவறைக்கு முன் சொந்த செலவிலேயே அருகாமையில் உள்ள பொது ஜலதாரை வரை ஜலதாரை கட்டிக்கொள்ள வேண்டும்.
27. கதவுகள், ஜன்னல்கள் 6'' 3'' 4'' 3'' முறையே அளவுக்கு குறையக்கூடாது.
28. கொடுக்கப்பட்ட தகவல்கள் தவறானதாக இருந்தாலோ பொது இடத்தில் ஆக்கிரமிப்பு இருந்தாலோ இவ்வனுமதி செல்லத்தக்கதல்ல.
29. கட்டித்தின் அருகில் உள்ள காலி நிலத்தில் மரக்கன்றுகள்/ வண்ண பூச்செடிகள் நட்டு பராமரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
30. கட்டுமானப் பணியில் மேற்கொள்ளப்படும் மலக்கழிவு டேங்க் கட்டுதல் அல்லது பழைய மலக்கழிவு டேங்கிலிருந்து கழிவை அப்புறப்படுத்துதல் போன்ற பணிகளுக்கு கண்டிப்பாக இப்பேரூராட்சி துப்புரவுப் பணியாளர்களோ அல்லது மனித சக்தியையோ கண்டிப்பாக பயன்படுத்தக் கூடாது.
31. பார்வை (2) ல் காணும் செயல்முறை ஆணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க படல் வேண்டும்.
32. கட்டுமானங்ள் நடைபெறும் இடத்தில் வளர்ச்சி கட்டுப்பாடு விதிகளின்படி தளபரப்பு விகிதம் திறவிடங்கள் வாகன நிறுத்தம் மற்றும் பல விபரங்கள் அடங்கிய பலகை நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
33. மனை வரைப்படத்தில் அமையும் பொது ஒதுக்கீடு , பூங்கா 1, மற்றும் பூங்கா 2 மற்றும் அதற்கு செல்லும் உள் சாலைகளை உள்ளாட்சிக்கு தானமாக நில உடைமை மாற்றம் பெற்ற பின்பு ஒப்படை செய்யப்பட வேண்டும்.

செயல் அலுவலர்
கேத்தி பேரூராட்சி
கேத்தி

பெறுநர்
திரு. நிர்வாக பொறியாளர், த.கு.மா.வாரியம்,
த/க.பெயர் –
க.எண். –
கோயம்புத்தூர்

COPY

EXECUTIVE ENGINEER
T.N.S.C.B, CBE DIV